**STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2026**

Based on the recommendations of the Audit Committee, the Board of Directors of TANFAC Industries Limited ("the Company") at their meeting held on July24, 2026 have approved the Unaudited Financial Results for the Quarter ended July 30, 2026.

The aforementioned financial results are available on Company's website at https://tanfac.com/investors/results-reports/half-yearly-and-quarterly-financial-results and can also be accessed by scanning a Quick Response Code given below:

Place : Chennai
Date : July 24, 2026

For and behalf of Board of Directors of
TANFAC Industries Limited
Sd/-
Afzal Harunbhai Malkani
Managing Director

# THE ORISSA MINERALS DEVELOPMENT COMPANY LTD.

**(A Government of India Enterprise)**
**CIN: L51430OR1918GOI034390**
Regd. Office: Ground Floor, SAIL Building, Plot-271, Bidyut Marg, Unit-IV, Shastri Nagar, Bhubaneswar, Khordha, Odisha, India-751001
Email: **info.birdgroup@birdgroup.co.in**, Website: **www.birdgroup.co.in**

**STATEMENT OF AUDITED STANDALONE FINANCIAL RESULTS FOR THE YEAR ENDED 31st MAR, 2026 - IND-AS COMPLAINT**

(Rs.in Lakhs)

| SL. NO. | PARTICULARS | FOR YEAR ENDING 31.03.2026 | Qtr-III ENDING 31.12.2025 | FOR YEAR ENDING 31.03.2025 |
|---|---|---|---|---|
| 1 | Total Income from Operation / Other Income | 10,000.20 | 2,111.64 | 7,100.17 |
| 2 | Net Profit / (Loss) for the period (Before Tax, exceptional and / or extra ordinary items) | (539.97) | 587.05 | (4,863.58) |
| 3 | Net Profit / (Loss) for the period Before Tax (after exceptional and / or extraordinary items) | (539.97) | 587.05 | (4,863.58) |
| 4 | Net Profit / (Loss) for the period after Tax (after exceptional and / or extra ordinary items) | (290.77) | 434.41 | (4,043.92) |
| 5 | Total Comprehenshive income for the period [comprising profit / (loss) for the period (after tax) and other comprehenshive income (after tax)] | (284.42) | 434.41 | (4,105.47) |
| 6 | Paid up Equity Share Capital | 60.00 | 60.00 | 60.00 |
| 7 | Reserves (Excluding revaluation reserve) as shown in the audited balance sheet of the previsous year | (5,523.75) | (4,747.89) | (5,239.33) |
| 8 | Net Worth | (5,463.75) | (4,687.89) | (5,179.33) |
| 9 | Earning per share (of Re. 1/-each) (for continuing and discontinued operations):- | | | |
| | 1. Basic: | (4.85) | 7.24 | (67.40) |
| | 2. Diluted | (4.85) | 7.24 | (67.40) |

1. The above results of the Company were approved by the Board of Directors at their respective meetings held on 24th July' 2026.
2. The above is the extract of the detail format of Annual Financial Result filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full Format of the Annual Financial Results are available on the Company's Website: **www.birdgroup.co.in**, the NSE (**www.nseindia.com**), the BSE (**www.bseindia.com**) and the CSE (**www.cse-india .com**)

**Place:** Vishakhapatnam
**Date:** 24th July 2026

**For and on behalf of the Board of Director**
**Sd/-**
**(G V N Prasad)**
Managing Director

NORTHERN ARC

# NORTHERN ARC CAPITAL LIMITED

CIN: L65910TN1989PLC017021
Regd. Office: IITM Research Park, 10th Floor, Kanagam Village, Taramani, Chennai - 600 113
Phone No.: 044 6668 7000
E-mail: cs@northernarc.com Website: www.northernarc.com

## NOTICE OF THE 18TH ANNUAL GENERAL MEETING

Notice is hereby given that the **18th Annual General Meeting** ("AGM") of the members of Northern Arc Capital Limited ("the Company") will be held through Video Conference ("VC")/ Other Audio Visual Means ("OAVM") without the physical presence of the members at a common venue on **Tuesday, August 18, 2026 at 11:30 A.M. (IST)** to transact the businesses, as set out in the notice, in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and the Rules made thereunder and the Securities and Exchange Board of India ('SEBI') (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.read with Circulars dated April 08, 2020, April 13, 2020 and May 05, 2020, General Circular No. 09/2024 dated September 19, 2024, and General Circular No. 03/2025 dated September 22, 2025 issued by the Ministry of Corporate Affairs (hereinafter collectively referred to as "the Circulars").

Accordingly, in compliance with the circulars, Notice of AGM along with the Explanatory Statement and the Annual Report for the FY 2025-26 will be sent only through electronic mode to those members whose e-mail addresses are registered with the Company / Depository Participants or Registrar & Share Transfer Agent i.e., Kfin Technologies Limited ('RTA') and will also be available on the Company's website i.e., www.northernarc.com and the website of Stock Exchanges viz. BSE limited at www.bseindia.com and National Stock Exchange of India Limited at www.nseindia.com and on the website of National Securities Depository Limited (NSDL): www.evoting.nsdl.com.

Members can attend and participate in the AGM only through VC/OAVM. The procedure and instruction for joining AGM through VC/OAVM will be provided in the Notice of the AGM. Members attending the meeting through VC/OAVM shall be counted for the purpose of reckoning quorum under Section 103 of the Companies Act, 2013. Those members whose e-mail ids are not yet registered or updated are requested to register their e-mail address with their depository participants.

The Company is providing remote e-voting facility to all its members to cast their votes on all the resolutions which are set out in the notice of the AGM. Members have the option to cast their vote on any resolutions using the remote e-voting facility or e-voting during the AGM. Detailed procedure for remote e-voting / e-voting during the AGM for all the members (including the members whose email addresses are not registered with DPs / Company / RTA) will be provided in the Notice of the AGM.

**Place : Chennai**
**Date : July 24, 2026**

**For Northern Arc Capital India Limited**
**Sd/-**
**Prakash Chandra Panda**
**Company Secretary & Compliance Officer**

**In fast or fragile markets, insight brings perspective.**

Decode market moves with sharp, fast, expert analysis — *every day* with **Stocks in the News** in Business Standard.

To book your copy, SMS **reachbs** to **57575** or email **order@bsmail.in**

Business Standard
Insight Out

## மத்திய அரசுடன் சிஜேபி 3ம் கட்ட பேச்சு வார்த்தை

# தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்வாரா? வலுக்கும் மாணவர்கள் போராட்டம்

**புதுடெல்லி, ஜூலை 25–**

**மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை குறித்து பதில் அளிக்க மத்திய அரசு இன்று வரை அவகாசம் கேட்டுள்ளதாக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) தெரிவித்துள்ளது.**

நீட் தேர்வில் நடந்த வினாத்தாள் கசிவு முறைகேட்டைக் கண்டித்தும், கல்வித்துறையில் சீர்திருத் தங் கள் செய்ய வலியுறுத்தியும் டெல்லி ஜந்தர் மந்தரில் மாணவர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினருடன் மத்திய அரசு தரப்பில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டா கடந்த சில நாட்களுக்கு முன்பு பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் இதில் உடன்பாடு எட்டப்பட வில்லை.

இந்த நிலையில் நேற்று 2வது முறையாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த பேச்சுவார்த்தை இரு தரப்பினருக்கும் பொதுவாக அரசியல் சாசன கிளப்பில் நடைபெற்றது. அரசாங்கம் தரப்பில் மத்திய அமைச்சர்கள் ஜே.பி. நட்டா, ஜிதேந்திர சிங் ஆகியோர் கலந்து கொண்டனர். கரப்பான் பூச்சி ஜனதா தரப்பில் இருந்து அதன் செய்தி தொடர்பாளர்கள் சவுரவ் தாஸ், அசுதோஷ் ரங்கா ஆகியோர் பங்கேற்றனர். கூட்டம் சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது.

கூட்டம் முடிந்ததும் ஜே.பி.நட்டா நிருபர்களிடம் கூறியதாவது:

கூட்டத்தில் நாங்கள் அவர்களின் கவலைகளைக் கேட்டறிந்தோம். பிரச்சினைகள் பல்வேறு கோணங்களில் விவாதிக்கப்பட்டன. தேர்வு சீர்திருத்தங்களுக்காக 3 முக்கிய கோரிக்கைகளையும், 5 ஆலோசனைகளையும் முன்வைத்தனர். இது தொடர்பாக அரசாங்கம் கலந்துரையாடல்களை நடத்திய பிறகு, நாளை (அதாவது இன்று) பிற்பகல் மீண்டும் அவர்களைச் சந்திப்போம். அப்போது அரசாங்கத்துக்குள் நாங்கள் நடத்திய கலந்துரையாடல் குறித்து தெரிவிப்போம் என்றார்.

### நீட் தற்கொலைக்கு ரூ.1 கோடி

கரப்பான் பூச்சி ஜனதா கட்சி சார்பில் தேசிய செய்தித் தொடர்பாளர் அசுதோஷ் ரங்கா கூறியதாவது:

தர்மேந்திர பிரதான் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் அல்லது பதவியில் இருந்து அவர் நீக்கப்பட வேண்டும். இதுகுறித்து அரசிடம் விரிவாக விவாதித்துள்ளோம். எங்கள் கோரிக்கைக்கு, நாளை (இன்று) மதியம் வரை அரசு அவகாசம் கேட்டுள்ளது. அவரை விரைவில் அரசு பதவியில் இருந்து நீக்கும் என நம்புகிறோம். தற்கொலை செய்துகொண்ட நீட் தேர்வர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 கோடி இழப்பீடு வழங்குவது மற்றும் மாணவர்கள் மீதான முதல் தகவல் அறிக்கைகள், சட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவது ஆகிய இரண்டு கோரிக்கைகளுக்கும் கொள்கை ரீதியாக குறிப்பிடத்தக்க உடன்பாடு ஏற்பட்டுள்ளது. எங்களின் 3 முக்கிய கோரிக்கைகளில் 2க்கு அரசாங்கம் மிகவும் சாதகமான பதிலை அளித்துள்ளது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகள் மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் போராட்டக்காரர்களுக்கு எதிராக எந்த முதல் தகவல் அறிக்கைகளோ அல்லது சட்ட வழக்குகளோ பதிவு செய்யப்படாது என்ற இறையாண்மை உத்தரவாதத்துக்கான எங்கள் கோரிக்கையும் இதில் அடங்கும்.

இது தொடர்பாக விரைவில் எழுத்துப்பூர்வமான ஒப்பந்தத்தைப் பெறுவோம் என்று நம்புகிறோம். தர்மேந்திர பிரதானின் ராஜினாமா குறித்தும் விரிவான விவாதம் நடைபெற்றது. நாளை (இன்று) பிற்பகல் மற்றொரு சந்திப்புக்கும் மத்திய அரசு முன்மொழிந்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆந்திர அரசு பறிமுதல் செய்த காசிமேடு மீனவர்கள் விசைப் படகுகளை விடுவிக்க நடவடிக்கை: எடப்பாடி வலியுறுத்தல்

**சென்னை, ஜூலை 25–**

**ஆந்திர மாநில காவல்துறை மற்றும் மீன்வளத் துறையால் பறிமுதல் செய்யப்பட்ட காசிமேடு மீனவர்களின் 7 விசைப் படகுகளை விடுவிப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் சுமார் 800 விசைப் படகுகளும், 2000 ஃபைபர் படகுகளும் தங்குதளமாகக் கொண்டு ஆயிரக்கணக்கான மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகிறார்கள். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கான மீன் இறைச்சி தேவையை இவர்கள்தான் பூர்த்தி செய்து வருகின்றனர்.

இங்கு பிடிக்கப்படும் மீன்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு, நமது நாட்டிற்கு அந்நிய செலவாணியை ஈட்டித் தருகின்றனர். நாளொன்றுக்கு சுமார் 30 ஆயிரம் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் காசிமேடு மீனவர்களின் மீன்களை நம்பியுள்ளனர்.

சென்னை மாகாணத்தில் இருந்து ஆந்திரா தனி மாநிலமாக பிரிந்து சென்றாலும், இவர்களது வாழ்விடம் ஆந்திராவை ஒட்டி இருப்பதால், எப்போதும்போல் தமிழ்நாடு மற்றும் ஆந்திர கடல் பகுதிகளில் அமைதியாக மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர்.

கடந்த 50 வருடங்களாக ஆந்திர மீனவர்களும், தமிழக மீனவர்களும் சகோதரர்களாக மீன்பிடித் தொழிலை செய்து வருகின்றனர். தமிழக மீன்பிடி படகுகளில் ஆந்திராவைச் சேர்ந்த மீனவத் தொழிலாளர்கள் பெருமளவு பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில், ஆந்திர மாநில அரசு தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஆந்திர கடற்கரைப் பகுதியில் மீன்பிடித் தொழில் செய்யக்கூடாது என்று கூறி, 17.6.2026 அன்று காசிமேடு துறைமுகத்தைச் சேர்ந்த 7 விசைப் படகுகளை பறிமுதல் செய்துள்ளனர். இன்றுவரை அந்த 7 விசைப் படகுகளை ஆந்திர அரசு விடுவிக்கவில்லை. காசிமேடு மீனவர்கள், த.வெ.க. அரசு மற்றும் தமிழக மீன்வளத் துறை அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் இதுவரை தமிழக அரசு, பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று காசிமேடு மீனவர்கள் புகார் தெரிவிக்கின்றனர். இதனால், பறிமுதல் செய்யப்பட்ட விசைப் படகு உரிமையாளர்களும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவத் தொழிலாளர்களும், மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல இயலாமல், அவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆந்திர அரசு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட காசிமேடு மீனவர்களின் 7 விசைப் படகுகளை விடுவிக்க த.வெ.க. அரசின் முதலமைச்சர் உடனடியாக முயற்சிக்க வேண்டும். இனியும் காசிமேடு மீனவர்களை, ஆந்திர அரசு அதிகாரிகளால் துன்புறுத்தப்படாமல் இருப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# அசாம் கனமழை : சாவு எண்ணிக்கை 61 ஆக உயர்வு; 363 நிவாரண முகாம்களில் 3.15 லட்சம் பேர் தஞ்சம்

**கவுகாத்தி, ஜூலை 25:**

**அசாம் மாநிலத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள கடுமையான வெள்ளப்பெருக்கு நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. வெள்ளம், அதோடு தொடர்புடைய சம்பவங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 61 ஆக உயர்ந்துள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.**

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 14 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் சராடியோ மாவட்டத்தில் 7 பேரும், சிவசாகர் மாவட்டத்தில் 6 பேரும், ஜோர்ஹாட் மாவட்டத்தில் ஒருவரும் அடங்குவர். மேலும், சிவசாகர் மாவட்டத்தில் ஒருவர் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டு மாயமாகியுள்ளார்.

மாநிலத்தின் 12 மாவட்டங்களில் 7.05 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் சிவசாகர் மாவட்டத்தில் 3,48,555 பேரும், சராடியோவில் 1,88,404 பேரும், ஜோர்ஹாட்டில் 1,26,793 பேரும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் வீடுகளை இழந்த 3.15 லட்சத்துக்கும் மேற்பட்டோர், அரசால் அமைக்கப்பட்டுள்ள 363 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட தொலைதூரப் பகுதிகளில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். குறிப்பாக நசிரா பகுதியில் மட்டும் சுமார் 50 ஆயிரம் பேர் வெள்ளநீரால் சூழப்பட்டு வெளி உலகத் தொடர்பின்றி உள்ளனர்.

### 56,000 ஹெக்டேர் விவசாயப் பயிர் பாதிப்பு

டிரோன்கள் மூலம் உணவுப் பொட்டலங்களை வழங்கிய முயற்சி பலனளிக்காத நிலையில், இந்திய ராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை ஆகியவை இணைந்து படகுகள் மூலம் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளன.

வெள்ளத்தால் 37 வருவாய் வட்டங்களில் உள்ள 856 கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. மேலும், 56,606 ஹெக்டேர் பரப்பளவிலான விவசாயப் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 17,107 ஆடு, மாடு மற்றும் கோழிகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதுவரை 3.34 லட்சத்துக்கும் அதிகமான கால்நடைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரம்மபுத்திரா நதியின் துணை ஆறுகளான திக்ஹவ் மற்றும் தன்சிரி ஆகியவை பல இடங்களில் அபாயக் கட்டத்தைத் தாண்டி ஓடுவதால், மேலும் பல பகுதிகளில் வெள்ள அபாயம் நீடித்து வருகிறது. தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு, நிவாரண மற்றும் மருத்துவப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# நீதிமன்ற விசாரணை வீடியோக்கள்: சமூக ஊடகங்கள், டிஜிட்டல் தளங்கள் வெளியிட சுப்ரீம் கோர்ட் தடை

**புதுடெல்லி, ஜூலை 25–**

**நீதிமன்ற விசாரணைகளின் ஆடியோ மற்றும் வீடியோ பதிவுகளை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் முன் அனுமதியின்றி சமூக ஊடகங்கள் மற்றும் பிற டிஜிட்டல் தளங்களில் எடுத்து வெளியிடுதல், திருத்துதல், பகிர்தல், மறுபதிவேற்றம் செய்தல், பதிவேற்றம் செய்தல் அல்லது அதன்மூலம் வருவாய் ஈட்டுதல் ஆகியவற்றுக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.**

தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜாய்மல்யா பக்சி மற்றும் வி. மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. அதன்படி, சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்றத்தின் பதிவாளர் ஜெனரல் அல்லது உச்சநீதிமன்றத்தின் செயலாளர் ஜெனரலின் முன் அனுமதியின்றி நீதிமன்ற விசாரணைகளின் ஆடியோ அல்லது வீடியோ பதிவுகளை எடுத்து, மாற்றி, பரப்பி, சமூக ஊடகங்களில் பதிவிட்டு, மறுபதிவேற்றம் செய்து அல்லது அதன்மூலம் வருவாய் ஈட்டக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும், நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த செய்தி வெளியீடுகளுக்கு இந்த இடைக்கால உத்தரவு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

நீதிமன்ற விசாரணைகளின் ஆடியோ, வீடியோ பதிவுகளை வெட்டி, திருத்தி, சூழலுக்கு புறம்பாக சமூக ஊடகங்களில் பரப்புவதையும், அதன்மூலம் வருவாய் ஈட்டுவதையும் கட்டுப்படுத்த வழிகாட்டுதல்களை கோரி பத்திரிகையாளர் ஹர்ஷிதா குரோவர் தாக்கல் செய்த பொதுநல மனுவை விசாரித்தபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

### கண்ணியத்தை பாதிக்கும்...

நீதிமன்றத்தில் நடைபெற்ற உரையாடல்களை தேர்ந்தெடுத்து, முழு பின்னணியின்றி வெளியிடுவது நீதித்துறையின் கண்ணியத்தை பாதிப்பதுடன், நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கையையும் சீர்குலைக்கிறது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மனுவுக்கு பதிலளிக்க அனைத்து உயர்நீதிமன்றங்களுக்கும் நோட்டீஸ் அனுப்பிய உச்சநீதிமன்றம், மனுவில் கோரப்பட்டுள்ள நிவாரணங்களை செயல்படுத்த எந்த மத்திய அமைச்சகங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்பது குறித்து முன்மொழிவை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், நீதிமன்ற விசாரணைகளின் நேரடி ஒளிபரப்புக்காக உச்சநீதிமன்றம் வெளியிட்ட மாதிரி வழிகாட்டுதல்களை உயர்நீதிமன்றங்கள் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தியுள்ளன என்பதையும், தொடர்ச்சியான நேரடி ஒளிபரப்பின் தாக்கம் குறித்து அறிக்கை தாக்கல் செய்யவும் அனைத்து உயர்நீதிமன்றங்களுக்கும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கடலூர் மாவட்ட நிர்வாகிகள்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, ஜூலை 25–**

**கடலூர் மாவட்ட புதிய நிர்வாகிகளை எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

கடலூர் தெற்கு மாவட்டத்தின், மாவட்ட, ஒன்றிய, நகர, நகரியக் கழகம் மற்றும் சார்பு அமைப்புகளின் நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் கீழ்க்காணும் பொறுப்புகளுக்கு இன்று முதல் நியமிக்கப்படுகிறார்கள்.

கடலூர் தெற்கு மாவட்ட எம். ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர்கள் –பி. ராஜாராமன், முனு. கோவிந்தராஜ், மாவட்ட துணைச் செயலாளர் –எஸ். பக்தவச்சலம்,

கடலூர் தெற்கு மாவட்ட புரட்சித் தலைவி பேரவை இணைச் செயலாளர் யு.தேவானந்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் – எம்.செந்தாமரை கண்ணன், எஸ்.ஜி. ஆறுமுகம், ஆர். சின்னராசு, பி. ராஜேந்திரன்,

கடலூர் தெற்கு மாவட்ட எம். ஜி.ஆர். இளைஞர் அணி இணைச் செயலாளர் – கே.தனசேகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் – ஆர். திலீபன், பி.சுரேஷ், ஆர். ஸ்ரீவத்ஸன் தீபக்,

கடலூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் – எஸ். ராதிகாராஜ், விருத்தாசலம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஆர். வேல்முருகன், நல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சேவை பி. ராஜேந்திரன், மங்களூர் கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் வாகை. வி.இளங்கோவன், விருத்தாசலம் நகர செயலாளர் – ஆர்.டி.ஆர். ரமேஷ் ஆகியோர் இன்று முதல் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக உடன்பிறப்புகள் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிடக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# திருவல்லிக்கேணி காவல்நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட்டார் செந்தில் பாலாஜி

**சென்னை, ஜூலை 25–**

**குதிரை பேர வழக்கில் முன் ஜாமீன் பெற்ற முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட்டார்.**

தமிழக வெற்றிக் கழகத்தின் ஊத்தங்கரை தொகுதி எம்.எல்.ஏ இளையராஜாவிடம் பேரம்பேசி, தவெக ஆட்சியை கவிழ்க்க சதி செய்ததாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக்குமார் உள்ளிட்டோர் மீது திருவல்லிக்கேணி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் இருவருக்கும் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் நிபந்தனையுடன் முன்ஜாமீன் வழங்கியது. மேலும், மறு உத்தரவு வரும் வரை காலையும், மாலையும் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராக நீதிமன்றம் நிபந்தனை விதித்தது. இதற்கிடையே, போலீசார் தங்களை துன்புறுத்தக் கூடாது என உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் இருவரும் மனுத்தாக்கல் செய்தனர். இந்த மனு விசாரணையின்போது, "முன் ஜாமின் வழங்கப்பட்டு இதுவரை இருவரும் சரணடையவில்லை; சரணடையாத பட்சத்தில் துன்புறுத்தக்கூடாது என எப்படி கோர முடியும்? என நீதிபதி கேள்வி எழுப்பியதுடன், இருவரது மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

நீதிமன்றம் ஜாமின் வழங்கிய நிலையில், பிணைத்தொகை செலுத்துவதற்காக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நேற்று ஆஜரானார். நீதிமன்ற உத்தரவிற்கிணங்க ஆஜரானதைத் தொடர்ந்து, இந்த வழக்கில் நிபந்தனையுடன் ஜாமின் வழங்கி உத்தரவிட்டுள்ளது சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம். மேலும் நாளை முதல் திருவல்லிகேணி காவல்நிலையத்தில் காலை 10.30 மணிக்கும், மாலை 5.30 மணிக்கும் நேரில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி இன்று காலை திருவல்லிக்கேணி காவல் நிலையம் வந்தார். அவரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அதைத் தொடர்ந்து அங்கிருந்த புத்தகத்தில் செந்தில் பாலாஜி கையெழுத்திட்டார். அவருடன் வந்த அவரது சகோதரர் அசோக்குமாரும் கையெழுத்திட்டார்.

# திருவண்ணாமலை இடுக்கு பிள்ளையார் கோவிலில் தரிசனம்: மூச்சுத் திணறல் ஏற்பட்டு பக்தர் உயிரிழப்பு

**திருவண்ணாமலை, ஜூலை 25–**

திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் இடுக்கு பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் சிறிய குகை போன்ற அமைப்பில் 3 வாசல்கள் உள்ளன. பின் வாசல் வழியாக ஒருக்களித்து படுத்தவாறு உள்ளே நுழைந்து, மெல்லமாக கைகளை ஊன்றியவாறு நகர்ந்து முன் வாசல் வழியாக வெளியே வரவேண்டும்.

குகை போன்ற பகுதியில் இருந்து வெளியே வந்த உடன் நந்தி இருக்கும். பக்தர்கள் நந்தி பகவானையும், இடுக்கு பிள்ளையாரையும் வணங்கி செல்கின்றனர். பெரும்பாலான கிரிவல பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று இடுக்கு பிள்ளையார் கோவில் குகையில் நுழைந்து வெளியே வழிபட்டு செல்கின்றனர்.

இந்த நிலையில் நேற்று இரவு ஆந்திராவை சேர்ந்த மணிக்குமார் (வயது 36) என்பவர் தனது குடும்பத்துடன் கிரிவலம் சென்றார். சுமார் 11 மணியளவில் இடுக்கு பிள்ளையார் கோவிலுக்கு மணிக்குமார் வந்தார். குகை வடிவத்தில் உள்ள கோவில் பகுதியில் படுத்தபடி நுழைந்தார். உடல் பருமன் அதிகம் என்பதால் குகையில் இருந்து வெளியே வர முடியாமல் தவித்தார். பின்னர் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயங்கினார். இதனை கண்ட சக பக்தர்கள் மயங்கி கிடந்தவரை போராடி வெளியே கொண்டு வந்தனர்.

108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் மணிக்குமார் வரும் வழியிலே இறந்துவிட்டதாக கூறினர். இதை கேட்ட மணிக்குமார் குடும்பத்தினர் கதறி அழுதனர். இதுகுறித்து திருவண்ணாமலை தாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


TANFAC

## டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

CIN : L24117TN1972PLC006271

**பதிவு அலுவலகம் :** 14, **சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ், குடிகாடு, கடலூர்** 607 005. Website: www.tanfac.com - Email : tanfac.invreln@anupamrasayan.com

Telephone : +91 4142 239001-5 - Fax : + 91 4142 239008

**30.06.2026 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

தணிக்கை குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ("நிறுவனம்") நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, ஜூலை 24, 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில், ஜூன் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்கூறிய நிதிநிலை முடிவுகள், நிறுவனத்தின் இணையதளமான https://tanfac.com/investors/results-reports/half-yearly-and-quarterly-financial-results என்ற முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் நிதிநிலை முடிவுகளை பார்வையிடலாம்.

இயக்குநர் குழுவின் சார்பாக
டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
அப்சல் ஹாரூன்பாய் மல்கானி
இயக்குநர்

இடம் : சென்னை
நாள் : ஜூலை 24, 2026



HAP

## ஹட்சன் அக்ரோ ப்ராடக்ட் லிமிடெட்

CIN: L15499TN1986PLC012747

**பதிவு அலுவலகம்: எண்.41 (49), ஜானகிராம் காலனி மெயின் ரோடு, ஜானகிராம் காலனி, அரும்பாக்கம், சென்னை 600106. Phone: +91 44 4796 1124 Fax: +91 44 4796 1124**

**கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண்.14, TNHB, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 'A' சாலை, சோழிங்கநல்லூர், சென்னை 600 119. Phone: +91 44 2450 1622 Fax: +91 44 2450 1422. WEBSITE: www.hap.in; E-mail id: secretarial@hap.in**

### அறிவிப்பு

**காகித வடிவிலான பங்கு பத்திரங்களை மாற்றுதல் மற்றும் மின்னணு– பத்திரங்களாக மாற்றுவதற்கான சிறப்புச் சாளரம்**

ஜனவரி 30, 2026 தேதியிட்ட செபி (SEBI) சுற்றறிக்கை எண். HO/38/13/11(2)2026–MIRSD–POD/I/3750/2026–ன் படி, ஏப்ரல் 01, 2019–க்கு முன்பு விற்கப்பட்ட/வாங்கப்பட்ட காகித வடிவிலான பங்கு பத்திரங்களை (physical securities) மாற்றுவதற்கும் மற்றும் மின்னணு–பத்திரங்களாக (dematerialisation – டிமேட்) மாற்றுவதற்கும் **பிப்ரவரி 5, 2026 முதல் பிப்ரவரி 4, 2027 வரை** ஒரு வருட காலத்திற்கு ஒரு சிறப்புச் சாளரம் (Special Window) திறக்கப்பட்டுள்ளது என்று பங்குதாரர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இந்த வசதி புதியதாக சமர்ப்பிக்கப்படுபவற்றுக்கும், மற்றும் ஆவணங்கள், செயல்முறைகள் அல்லது வேறு ஏதேனும் குறைபாடுகள் காரணமாக முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட, திருப்பி அனுப்பப்பட்ட அல்லது கவனிக்கப்படாத மாற்றுதல் கோரிக்கைகளுக்கும் பொருந்தும். மாற்றுவதற்காக சமர்ப்பிக்கப்படும் பங்குகள் டிமேட் (demat) முறையில் மட்டுமே செயல்படுத்தப்படும், மேலும் அவை மாற்றத்தைப் பதிவு செய்த தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு முடக்கத்திற்கு (lock–in) உட்பட்டிருக்கும். பங்குதாரர்கள் தேவையான ஆவணங்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்: இன்டக்ரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், எண்.30, ரமணா ரெசிடென்சி, 4–வது குறுக்குத் தெரு, சம்பிகே சாலை, மல்லேஸ்வரம், பெங்களூரு – 560 003, தொலைபேசி: (080) 2346 0815 முதல் 818 வரை, தொலைநகல் (Fax): (080) 2346 0819, மின்னஞ்சல் முகவரி: gopi@integratedindia.in.

**கே.ஒய்.சி (KYC) புதுப்பித்தல்**

உறுப்பினர்கள் தங்கள் பெயர், அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி/கைபேசி எண்கள், நிரந்தரக் கணக்கு எண் (PAN), கட்டளைகள் (mandates), நியமனங்கள் (nominations), அதிகாரப் பத்திரம் (power of attorney), வங்கியின் பெயர் மற்றும் கிளை, வங்கி கணக்கு எண், MICR குறியீடு, IFSC குறியீடு போன்ற வங்கி கணக்கு விவரங்கள் ஆகியவற்றில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், பங்குகளை மின்னணு வடிவில் வைத்திருப்பவர்கள் தங்களது சம்பந்தப்பட்ட டிபி–க்களுக்கும் (DPs – Depository Participants), பங்குகளை காகித வடிவில் வைத்திருப்பவர்கள் ஆர்.டி.ஏ (RTA) நிறுவனமான – இன்டக்ரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், எண். 30, ரமணா ரெசிடென்சி, 4–வது குறுக்குத் தெரு, சம்பிகே சாலை, மல்லேஸ்வரம், பெங்களூரு – 560 003 (தொலைபேசி எண். 080–23460815/6/7) என்ற முகவரிக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஹட்சன் அக்ரோ ப்ராடக்ட் லிமிடெட்டிற்காக**
**ஒப்பம்/–**
**சி சுப்பிரமணியம்**
**நிறுவன செயலாளர் & தகவிணக்க அதிகாரி**
**FCS 6971**

**இடம் : சென்னை**
**தேதி : 24 ஜூலை, 2026**